[2nd March 1959

SRI M. KALYANASUNDARAM : இன்னும் அந்த மில் திறக்கப் படவில்லை. அதைத் திறந்து தொடர்ந்து நடத்துவதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்யவேண்டுமென்று அந்த நிர்வாகம் கடன் வேண்டுமென்று சர்க்காரை நாடினார்களா ? அதற்கு உதவி செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மில்லுக்கு ஏராள மான கடன் இருப்பதால் இதை தொடர்ந்து நடத்துவதற்கு சரியான வசதியில்லை என்பதுதான் சர்க்கார் அபிப்பிராயம்.

SRI P. S. CHINNADURAI : உடன்பாடுகளை மீறுகிற முதலாளிகள் பேரில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் ஏன் தயங்குகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர் களுக்கு சர்க்கார் தயங்குகிறார்கள் என்று யார் சொன்னார் என்று கேட்கி றேன், நான்?

Pamba and Keeriyar rivers

* 487 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the proposal to share the Pamba river and Keeriyar river waters was taken up with the Kerala State; and

(*b*) if so, the stage at which this proposal stands?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : பம்பையாறு, கீரியாறு திட்டம் பரிசீலனை செய்யப்பட்டதா ? இதுபற்றி, சமீப காலத்தில் கழிந்த ஆண்டிலாவது கீரியாறு திட்டத்தைப் பரிசிலனை செய்தார்களா ? இதை நடத்தமுடியும் என்றாவது சர்க்காருக்குத் தோன்றுகிறதா ?

THE HON SRI P. KAKKAN : கீரியாறு திட்டத்தை ஏற் கனவே பரிசீலித்திருக்கிறார்கள். பரிசீலனை செய்திருக்கிறார்கள். அப்படி பரிசீலனை செய்ததில் அது லாபகரமான திட்டமில்லையென்று கைவிடப் பட்டிருக்கிறது. அதாவது "டிராப்" செய்திருக்கிறார்கள். பம்பையாறு திட்டத்தை எடுக்க பிரயத்தனம் செய்து கொண்டிருப்பதால் இதற்குத் தேவை யில்லை என்று கருதப்படுகிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ராஜா ஆப் ராம்நாட், அவர்கள் பி. டப்ளியூ. டி. மினிஸ்டராக இருந்தபோது கீரியாறுத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து நடத்தப் படுமென்று இந்த சட்டசபையில் உறுதி கொடுத்தது உண்மையா ? இதுகுறித்து அந்த வாக்குறுதிக்கு இன்றுவரை ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கி றதா ?

THE HON. SRI. P. KAKKAN : தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : பம்பையாறு திட்டம், கீரியாறு திட்டம் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவாகும் என்று மதிப் பிடப்பட்டது. அவைகளினால் எத்தனை ஏக்கர்களுக்கு பாசன வசதி ஏற் படும் என்று மதிப்பபிடப்பட்டது.

THE HON. SRI P. KAKKAN : பம்பையாறு திட்டத்திற்கு சுமார் 40 கோடி ரூபாய் உத்தேசமாக செலவாகும் என்று தெரிகிறது. கிரியாறுத் திட்டத்திற்காக கிட்டத்தட்ட 216 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று தெரிகிறது. விஸ்தீர்ணம், உத்தேசம் பம்பையாறுத் திட்டத்தின் கீழ் 2 லட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்களை நீர்ப்பாசனத்திற்குக் கொண்டு வந்து விவசாயம் செய்யலாம் என்று தெரிகிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிப்புத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர். திருநெல்வேலியில், சங்கரன்கோவில் தாலூகா.

Government contribution to certain panchayats

* 488 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the names of the Panchayats in Kanyakumari district and Shencottah taluk for which contribution from the Government is due for the year 1957–58 and the amount that is so due?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A statement [a] showing the names of panchayats in the Kanyakumari district and in the Shencottah taluk of Tirunelveli district and the amounts of contribution payable under Section 55 (1) of the Travancore Cochin Panchayats Act, 1950, to each of them, for the year 1957–58 is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : 1957–58-க்கு இந்த ஸ்டேட்மெண்டில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தொகையில் சுமார் 1 லட்சம் ரூபாய், அதாவது "மாட்சிங் கிராண்டு" அந்த பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்படவேண்டிய ரூபாய் கொடுக்கப்படாமல் இருந்திருக்கிறது. ஏன் இதில் இத்தனை காலதாமதம்? இதிலே எந்த விதமான தர்க்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. இது கொடுக்கப்பட வேண்டிய தொகை என்று எடுத்துக்கொண்டதாக இந்த ஸ்டேட்மெண்டில் இருக்கிறது.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : 1957–58-ம் ஆண்டு ரூ. 40,688 கொடுத்திருந்தது. மீதி இப்பொழுது நடப்பு ஆண்டில் ரூ. 2,01,618 கொடுத்து இந்தக் குறை நீங்கியிருக்கிறது.

Anicuts across certain rivers

* 489 Q.—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have received representations from the public of Arantangi taluk, Tanjore district, requesting construction of bed-dams or anicuts across Vellar and Pamban in Arantangi taluk, for diverting water to irrigation tanks; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Collector of Tanjore and the Chief Engineer (Irrigation) have been asked to examine the representations and their reports are awaited.

SRI R. SRINIVASA IYER : Is there any proposal to appoint special engineering staff in that uncommanded area to investigate these things?

---

[a] Printed as Appendix III on page 65–66 infra.